பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

14 08 2024 **WEDNESDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் 78-வது சுதந்திர தினத்தையொட்டி குயடிரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று இரவு ஏழு மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

2. இந்தியா – பாகிஸ்தான் பிரிவினையால், எண்ணற்ற மக்கள் சொல்லொன்னா துயரம் அனுபவித்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி நினைவுகூர்ந்துள்ளார்.

3. மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு இடைக்கால ஜாமின் வழங்க உச்சநீதிமன்றம் இன்று மறுத்துவிட்டது.

4. ஜப்பான் பிரதமர் திரு. **Fumio Kishida** வரும் செப்டம்பர் மாதம் பதவி விலகப் போவதாக அறிவித்துள்ளார்.

5. போலந்து ஓப்பன் டென்னிஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் இங்கிலாந்தின் **Joshua Paris** இணை இன்று பங்கேற்கிறது.

>>>>><<<<<<

நாட்டின் 78-வது சுதந்திர தினத்தையொட்டி குயடிரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று இரவு ஏழு மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

ஆகாஷவாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும் அவரது உரை இடம்பெறுகிறது.

குடியரசுத் தலைவர் உரையின் தமிழாக்கம் இரவு மணி 9-30-க்கு ஒலிபரப்பாகிறது.

இதனை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

குடியரசுத் தலைவரின் உரை காரணமாக அடுத்து வழக்கமாக இரவு மணி

7-15-க்கு ஒலிபரப்பாகும் ஆகாஷவாணி செய்தி அறிக்கை இரவு எட்டு மணிக்கு ஒலிபரப்பாகும்.

>>>>><<<<<

நாட்டின் 78வது சுதந்திர தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, தில்லி செங்கோட்டையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தேசியக்கொடியை ஏற்றி வைத்து உரையாற்றவுள்ளார்.

இதனையடுத்து, தலைநகர் தில்லியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ராணுவம் மற்றும் துணை ராணுவப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சுதந்திர தினத்தன்று அணிவகுப்பு மற்றும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

தில்லியில் நடைபெறும், சுதந்திர தின விழா கொண்டாட்டங்களை நாளை காலை 7 மணியிலிருந்து ஆகாஷவாணி நேரடியாக ஒலிபரப்பு செய்கிறது.

>>>>><<<<<

சுதந்திர தினத்தையொட்டி மத்திய மாநில காவல்படைகளைச் சேர்ந்த ஆயிரத்து 37 பேருக்கு குடியரசுத் தலைவர் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் தமிழக காவல்துறையைச் சேர்ந்த 23 பேர் இடம்பெற்றுள்ளனர்.

>>>>><<<<<

நேபாள தலைநகர் காத்மாண்டுவில் இந்திய சுதந்திர தினத்தை ஒட்டி, அங்குள்ள தூதரகம் சார்பில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கதக் நாட்டியக் கலைஞர் அர்பிதா டத்தா குழுவினரின் நடன நிகழ்ச்சியை நேபாள நாட்டின் கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. பத்ரி பிரசாத் பாண்டே பார்வையிட்டார்.

நேபாள நாட்டின் அரசு உயரதிகாரிகள், ராணுவ அதிகாரிகள், அரசியல் தலைவர்கள், கலைஞர்கள் இந்நிகழ்ச்சி கண்டு ரசித்தனர்.

>>>>><<<<<

இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தில் பங்கேற்கும் வகையில் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று புதுதில்லியில் உள்ள தமது இல்லத்தில் மூவர்ணக்கொடியை ஏற்றினார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர். எல். முருகனும், புதுதில்லியில் உள்ள தமது இல்லத்தில் தேசியக்கொடியை ஏற்றி வைத்து அதனை சமூகவலைதளத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார்.

வீரமும், தியாகமும் ஒருங்கமைந்து நாம் பெற்ற சுதந்திரத்திற்கு அடையாளமாக விளங்குவது நமது மூவர்ணக்கொடி என்று கூறியுள்ளார்.

தேசத்தின் உணர்வுகளை உள்ளடக்கி வைத்துள்ள தேசியக்கொடியை நாட்டு மக்கள் தங்களது இல்லங்களில் ஏற்றி கொண்டாடுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<<

நாட்டுப் பற்றை மக்களிடையே வளர்க்கும் நோக்கில் இம்மாதம் 9ஆம் தேதி முதல் 15ஆம் தேதிவரை நடைபெறும் இந்த இயக்கத்தில் மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் பங்கேற்று வருகின்றனர்.

தமிழகத்தில் பல்வேறு இடங்களிலும் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தில் பொதுமக்கள் பங்கேற்றுள்ளனர்.

இதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நாமக்கல்லில் அஞ்சல் துறையில் சார்பில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

நாமக்கல் தலைமை அஞ்சல் அலுவலகத்தில் இந்தப் பேரணியை அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் திருமதி. இந்திரா கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மயிலாடுதுறையிலும் அஞ்சல் துறை சார்பில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

200க்கும் மேற்பட்ட அஞ்சலக ஊழியர்கள் தேசியக்கொடியை ஏந்தி பேரணியில் பங்கேற்றனர்.

வேலூர் மாவட்டத்தில் பொதுமக்கள் தங்களது இல்லங்களில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மகிழ்ச்சியை தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட-பொதுமக்கள் 34 செகண்ட்ஸ்)

>>>>><<<<<<

குடியரசுத்தலைவர் மாளிகையில் அம்ரித் உதயம் தோட்ட கோடை விழாவை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று தொடங்கி வைத்தார்.

நாளை மறுநாள் முதல் செப்டம்பர் மாதம் 15ஆம் தேதிவரை பொதுமக்களும் பார்வையாளர்களும் அம்ரித் தோட்டத்தை பார்வையிட அனுமதிக்கப்படவுள்ளனர்.

இம்மாதம் 29ஆம் தேதி தேசிய விளையாட்டு தினத்தை ஒட்டி, விளையாட்டு வீரர்கள் குடியரசுத்தலைவர் தோட்டத்தை பார்வையிட முதன்முறையாக அழைக்கப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<<

1947ஆம் ஆண்டு இதே நாளில் இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிக்கப்பட்டதால், எண்ணற்ற மக்கள் சொல்லொன்னா துயரத்தை அனுபவித்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி நினைவுகூர்ந்துள்ளார்.

இந்நாளையொட்டி அவர் விடுத்துள்ள செய்தியில், இன்னல்களை அனுபவித்த மக்களின் தைரியத்தையும், மனஉறுதியையும் போற்றுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிரிவினையால் ஏற்பட்ட மாற்றத்தை ஏற்றுக் கொள்ளும் வகையில் அவர்கள் தங்களை தயார்படுத்திக் கொண்டார்கள் என்றும், இருப்பினும் தங்கள் சொந்தங்கள் மற்றும் உறவுகளோடு தொடர்ந்து பிணைப்பை ஏற்படுத்தி வந்துள்ளனர் என்றும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா விடுத்துள்ள சமூகவலைதளப் பதிவில்,

இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிக்கப்பட்ட போது, லட்சக்கணக்கான மக்கள் தங்கள் உறவுகளையும், தங்கள் இன்னுயிரையும் ஈந்து, தங்கள் சொந்த மண்ணையும் வீட்டையும் இழந்து, இன்னலுக்கு ஆளானதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரலாற்று நினைவுகளை ஏந்தி, வளர்ச்சிக்கான பாதையை நாம் தற்போது திட்டமிட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில், பொருளாதார சமூக வளர்ச்சிக்கான அடித்தளத்தை வலுவாக கட்டமைத்து வருகிறோம் என்றும் திரு. அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

பிரிவினை துயர தினத்தை ஒட்டி, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், தங்கள் சொந்த மண்ணிலிருந்து பிரிக்கப்பட்டதால், துயரத்தை அனுபவித்த மக்களை இந்நாளில் நினைவுகூருவோம் என்றும், அவர்களின் தியாகத்தை போற்றுவோம் என்றும் கூறியுள்ளார்.

அவர்கள் பட்ட இன்னல்கள், வளமான எதிர்காலத்தை நோக்கி நாம் செல்வதற்கு வழிவகுத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைதியையும் ஒற்றுமையையும் காத்து, நல்லிணக்கத்திற்கான கட்டமைப்பை உருவாக்குவோம் என்றும் திரு. எல். முருகன் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<<

திரிபுரா உள்ளாட்சித் தேர்தலில் பிஜேபிக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை அளித்த மக்களுக்கு நன்றி தெரிவிப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப்பதிவில் இந்த வெற்றி திரிபுரா மக்களுக்கானது என்று குறிப்பிட்டுள்ளார்.

அம்மாநில முதலமைச்சர் திரு. மானிக் ஷா, திரிபுரா மாநில பிஜேபி தலைவர் திரு. ராஜீவ் பட்டாச்சாரியா மற்றும் வெற்றிக்காக பாடுபட்ட பிஜேபி தொண்டர்களுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

மாநிலத்தின் வளர்ச்சிக்காக பிஜேபி தொடர்ந்து பாடுபடும் என்றும் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

>>>>><<<<<<

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு இடைக்கால ஜாமின் வழங்க உச்சநீதிமன்றம் இன்று மறுத்துவிட்டது.

திரு. கெஜ்ரிவாலின் ஜாமின் மனுமீது பதிலளிக்க சிபிஐ அவகாசம் கோரியதை அடுத்து, விசாரணையை இம்மாதம் 23ஆம் தேதிக்கு உச்சநீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

>>>>><<<<<<

நாகப்பட்டிணத்திலிருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு நாளை மறுநாள் கப்பல் சேவை தொடங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளதாக சிவகங்கை கப்பலின் கேப்டன் பிரகாஷ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - கேப்டன் 25 செகண்ட்ஸ்)

>>>>><<<<<<

கொல்கத்தாவில் பெண் மருத்துவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில், மத்திய புலனாய்வுப் பிரிவு சிபிஐ அதிகாரிகள் இன்று விசாரணையை தொடங்கியுள்ளனர்.

**Tala** காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கையை பெற்றுக் கொண்ட பின், நான்கு மருத்துவர்கள் மற்றும் சிலரிடம் அவர்கள் விசாரணை செய்தனர்.

கொல்கத்தா உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் இந்த வழக்கில் சிபிஐ விசாரணை மேற்கொண்டுள்ளது.

>>>>><<<<<<

ஜப்பான் பிரதமர் திரு. **Fumio Kishida** வரும் செப்டம்பர் மாதம் பதவி விலகப் போவதாக அறிவித்துள்ளார்.

டோக்கியோவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் பதவிக்கு மீண்டும் தேர்தல் நடத்த வேண்டாம் என்றும், தமது விடுதலை ஜனநாயக கட்சி சார்பில் புதிய பிரதமர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் கூறினார்.

>>>>><<<<<<

போலந்து ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் இங்கிலாந்தின் **Joshua Paris** இணை இன்று பங்கேற்கிறது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை இங்கிலாந்தின் **Scott Duncan -** அமெரிக்காவின் **Hunter Reese** இணையை எதிர்கொள்கிறது.

**>>>>><<<<<<**

பாரிஸ் ஒலிம்பிக் மல்யுத்த போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற அமன் ஷெராவத் – மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியாவை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

**>>>>><<<<<<**

**Mackay** நகரில் இன்று நடைபெற்ற இந்தியா ‘ஏ’ அணிக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 4 விக்கெட் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியா ‘ஏ’ அணி வெற்றி பெற்றது.

**>>>>><<<<<<**